***நம்ம முந்திரி கதை - ஆவணப்படம் திரையிடல் - பொம்மையார்பாளையம்***

*நமக்கும், நாம் உண்ணும் உணவுக்கும் இடையிலேயான தொடர்பு குறைந்துகொண்டு வரும் இவ்வுலகில், பணப்பயிரான முந்திரி பருப்பு பற்றிய,* ***"நம்ம முந்திரி கதை"*** *- ஆவணப்படத்தை ஆரோவில் ஷெல்த்தி கேஷ்யு நெட்வொர்க் மற்றும் ஆரோவில் அவுட்ரிச் மீடீயா இணைந்து உருவாக்கியுள்ளோம். (42 நிமிடங்கள் )*

*இதில், முந்திரி பயிரிடும் முறை, பராமரித்தல், அறுவடை, கொட்டையிலிருந்து பருப்பு எடுப்பது, முந்திரி பொருளாதாரத்தின் நிலை, முக்கியமாக பூச்சிக்கொல்லி தெளித்தலினால் சுற்றுபுறத்திற்கும் உயினங்களுக்கும் ஏற்படும் விளைவுகள் மற்றும் கொடிய பூச்சிக்கொல்லிகளுக்கு மாற்றான இயற்கை பூச்சிவிரட்டிகளை பயன்படுத்தும் முறைகளையும் விளக்குகிறது.*

*இது ஆரோவில் மற்றும் அதைச்சுற்றியுள்ள கிராம விவசாயிகளிடம் நடத்தப்பட்ட ஆய்வு அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆவணப்படமாகும்.*

*வரும்* ***ஞாயிறு 09, பிப்ரவரி 2020 மாலை 7 மணிக்கு*** *கிழக்கு கடற்கரை சாலை, பொம்மையார்பாளையம் கிராமத்தின் மாரியம்மன் கோயில் எதிரே, இந்த விழுப்புணர்வு ஆவணப்படத்தை திரையிடவுள்ளது.*

*அதன்பின் முந்திரி பற்றிய விவசாயிகளின் கருத்துகள் விவாதிக்கப்படும்.*